"கர்த்தர் நகரைக் காக்காவிட்டால்
அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்" தாபிதம்: 1876

சத்திய வேத பாது

# காவலன்

தந்தி: "கதலிக்பிறஸ்" யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 300
REGISTERED AT THE CEYLON G.P.O. AS A NEWSPAPER

89-ம் புத். || யாழ்ப்பாணம், 1964-ம் ஆண்டு புரட்டாதிமீ 19-ந்திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 || 37-ம் இல.

## ஞானோபதேச நடுநிலையம்

**மேற்றிராணியார் இல்லம், யாழ்ப்பாணம்.**

**ஞானோபதேச கருத்தரங்கு**

**நிகழிடம்:** யாழ்ப்பாணம், சம்பத்திரிசியார் கல்லூரி.
**நாள்:** 26-9-64 சனிக்கிழமை.
**காலம்:** காலை 8-45 மணி.

(மதிய போசனத்துக்கான ஆயத்தங்கள் ஒழுங்கு செய்யப்படும்)

* * *

**● அச்சுவேலியில்:**

சென்ற 12-9-64 சனிக்கிழமை காலை 8-30 மணிளவில் அச்சுவேலி, சென்ற் தெரேசா பாடசாலையில் ஞானோபதேச கருத்தரங்கு நடைபெறலாயிற்று. அவ்வமயம் குருமார் அறுவர், கன்னியர் பதினுறுபேர் உட்பட நூற்றுக்குமேற்பட்ட ஆண் பெண் பாலாரான ஆசிரிய, ஆசிரியைகள், இல்லறத் தொண்டர் ஆதியோர் கருத்தரங்கில் கலந்துகொண்டனர்.

ஞானோபதேச மறுமலர்ச்சியைப் பற்றிய சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. சிறப்பாக ஆய்வுக்குழு, பொதுமேடை, மாதிரி பாடம் இவைகளும் இடம்பெற்றமை குறிப்பிடத் தக்கது.

இத்துணைச்சிறப்பாக கருத்தரங்கு நிறைவேற சமுகந்தந்தோர் காண்பித்த ஒத்துழைப்பைக்கண்டு ஆனந்தமடைகிருேம்; நன்றி பாராட்டுகிருேம்.

நிர்வாகி.

# 2-ம் வத்திக்கான் சங்கத்தின் 3-வது வருட கூட்டம் 14-ம் தேதி ஆரம்பமாகிவிட்டது

● வத்திக்கான் தகவல் அதிகாரி இவ்வருட கூட்டங்களின் வேலைவேகம் முன்னிலும் பன்மடங்கு அதிகமாக இருப்பதற்குவேண்டிய சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன என அறிவித்திருக்கின்ருர்.

● மிகமுக்கியத்துவம்வாய்ந்த பல கருமங்கள், திருச்சபையின் முறைகளில் பல மாற்றங்களைக் கொண்டுவரக்கூடிய பல கருமங்கள் ஆராயப்பட இருக்கின்றன.

● சங்கத்தில் அமர்ந்திருக்கும் பிதாக்களுக்காகத் திவ்விய இஸ்பிரீத்துசாந்துவிடம் நேயர்கள் யாவரும் தினந்தோறும் மன்ருடி வருவார்களாக.

## சைபிறஸ்தீவின் நிலைமை
### பாப்பரசருக்குக் கவலையைத் தருகின்றன

சென்றசில தினங்களாக சைப்பிறஸ்தீவின் எழுந்துள்ள பயங்கரநிலைமையினல் பரிசுத்தபாப்பரசர் பெரும்கவலை கொண்டிருக்கின்ருர். சைபிறஸ்தீவில்வாழும் கிரேக்க இனத்தவர்களுக்கும், துருக்கிய இனத்தவர்களுக்கும் ஆழ்ந்தமனக்கசப்பு உண்டாகி இருப்பதன் காரணமாக கிரேக்க நாட்டு அரசாங்கமும், துருக்கி நாட்டு அரசாங்கமும் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொள்ளக்கூடிய நிலைமை ஏற்பட்டுவருவதே பாப்பரசரின் கவலைக்குக் காரணம். அவரது முதல் நிருபத்திலேயே கூறியிருந்ததுபோல், "சமாதானத்துக்குப் பங்கம் ஏற்படாது தவிர்க்க நான்முன்வந்து உழைக்கத் தயாராய் இருக்கிறேன்" என்ற அவரது வார்த்தைகளுக்கு இணங்க பரிசுத்தபாப்பரசர் தன்னுலான யாவற்றையும் செய்ய முன்வருவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

## சற்பிரசாத மகாநாட்டின்
### ஒரு ஞாபகசின்னம் ஆரம்பிக்கப்பட்டது

பம்பாய் நகரத்தில் இவ்வருட இறுதியில் நடக்க இருக்கும் சற்பிரசாதமகாநாட்டின் ஞாபகமாக பலகருமங்கள் நடக்கஇருக்கின்றன. அவற்றுள் ஒன்று சற்பிரசாதநாதரின் நித்தியஆராதனையை அந்நகரத்தில் தகுந்த ஓர் இடத்தில் நடத்திவருவது. இந்தச் சேவையை நடத்திவரும் பொறுப்பு அவுஸ்திரேலிய பிரதேச சற்பிரசாதநாதர்சபைப் பிதாக்கள் பிரிவினருக்கு கையளிக்கப்பட்டிருக்கின்றது. இச்சபையின் இருகுருமார் ஏற்கனவே பம்பாய்நகரில்வந்து சேர்ந்துவிட்டனர். தற்காலிகமாக அவர்கள் அங்கு அர்ச். சவேரியார் கோவிலிலேதங்கி தமது சேவைக்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்துவருகின்றனர்

### ஒழுக்கத்தைக் காப்பாற்றிய
## சினிமாநடிகை

செல்வி டொறின் மடென் என்பவர் பிரபல்யமிக்க சினிமாப்படநடிகைகளில் ஒருவர். இவர் அயர்லாந்துதேசத்தவர். "இளம் கசிடி"என்ற ஒருபடத்தில் முக்கிய நடிகையாகக் கடமையாற்ற ஒப்பந்தம் செய்துகொண்டவர். ஆனல், படத்தயாரிப்பில் பெண்களின் ஒழுக்கத்துக்கு ஈனம் விளைவிக்கும் பகுதிகளை நடிக்க வேண்டி இருந்த கட்டத்தைஅவதானித்த இப்பெண்மணி அப்படத்தயாரிப்பில் இருந்து தம்மை விலக்கும்படி கேட்டுக்கொண்டார்

## கன்னியாஸ்திரிகளுக்கு ஒரு புதிய வேலை

இம்மாச இறுதியில் இங்கிலாந்தில் பெர்மிங்காம்நகரில் திறக்கப்படஇருக்கும் ஒருபுத்தக வியாபார ஸ்தாபனத்தில் அத்தேசத்தில் முதன்முதலாக ஒருகன்னியாஸ்திரிசபையினர் விற்பனையாளர்களாகத் தொண்டாற்றுவர். இக்கன்னியாஸ்திரிகள் இத்தாலிதேசத்தில் பலவருடங்களுக்கு முன் ஸ்தாபிக்கப்பட்ட அர்ச். சின்னப்பர்சபைக்குச்சேர்ந்தவர்கள். உலகில் பலதேசங்களிலும் தேவனுடைய போதனையைப் பரப்ப இத்தகைய தொண்டாற்றி வருகின்றனர். சமயநூல்களும், நல்லொழுக்க பிரசுரங்களும் எழுதுவதிலும், அச்சிடுவதிலும், விற்பனைசெய்வதிலும் இவர்களது விசேஷகவனம் செலுத்தப்படுகின்றது. யேசுநாதரின் போதனைகளை உலகிலே பரப்ப கன்னியாஸ்திரிமார்செய்துவரும் தொண்டுகள் பலவகைப்பட்டனவாம். அவற்றில்இதுவும் ஒன்று.

# போலிஷ் கத்தோலிக்க மக்களின் வீரத்துவ வேதவிசுவாசம்

இம்முறை சற்பிரசாதத் திருநாளைத் தாங்களாகவே ஒரு விடுமுறைநாளாக்க முனைந்து பல்லாயிர பதினுயிரக் கணக்கான போலிஷ் கத்தோலிக்கமக்கள் கம்யூனிஸ்த ஆட்சியைத் திடசித்தமாக எதிர்த்துநின்றும், தொழிற்சாலைகள், காரியாலயங்களுக்குச் செல்லாது இல்லங்களிலே தங்கியிருந்தும் காரியத்தைச் சாதித்து வெற்றியீட்டலாயினர். அன்றுதினம் அவர்கள் வேலைத்தலங்களுக்குச் சென்று அறிவியாமல் விட்டதுமன்றித் திருவழிபாடுகளுக்கென்று பெருந்திரளாக ஆலயங்களைநோக்கிச் சரிந்துகொண்டுமிருந்தார்கள்.

"எமதுநாட்டின் தலைவர்கள் சுதந்திரத்தினதும், நீதியினதும் உண்மையானபோக்கிலே ஆட்சிசெய்யத் தூண்டப்பட வேண்டுமென மன்ருட வேண்டும்; கத்தோலிக்கரென்றமட்டிலே போலாந்தின் வாழ்க்கையை வியாபிக்கச் செய்யுமாறு நாம் சுவிசேஷத்தை மனங்கொண்டு ஆசிக்கவேண்டு"மென்று கர்தினல் ஸ்ரீபன் விசின்ஸ்கி ஆண்டகை சகலருக்கும் வேண்டுகோள் விடுத்தபோது வாஷோதலைநகரின் மத்தியிலே ஓர் இலட்சம்மக்கள் திரண்டிருந்து அதனைக் கேட்டுநின்ருர்கள். ஓர் "சாதாரண கம்யூனிஸ்த வேலைநாள்" ஆகிய அன்றுதினம் ஆங்கு குழுமியிருந்த பெருஞ் சனத்திரள் சகல போக்குவரத்துகளையும் தடுத்து நிறுத்திவிட்டது. இந்த

[ தொடர்ச்சி 5-ம் பக்கம் ]

## மிசிசிப்பி பிரதேச மேற்றிராணியாரின் இன்ஒற்றுமை முயற்சி

ஐக்கிய அமெரிக்க உயர்நீதிமன்றத்தின் சட்டப்படி அந்நாட்டுப் பள்ளிக்கூடங்களில் நிறவேற்றுமை பாராட்டாது வெள்ளையரும் நீகிருேக்களும் சகலபள்ளிக் கூடங்களிலும் இடம்பெற வேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கின்றது. எனினும் சண்டைசச்சரவு உண்டாகாதிருக்கப் பெரும்பாலும் பிறிதுபிறிதான பள்ளிக்கூடங்களே எங்கும்காணலாம். விசேஷமாக மிசிசிப்பிப் பிரதேசத்திலே வெள்ளையர்கள் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மைஉடையவர்களாய் இல்லை. ஆனல், இந்தப் பிரதேச கத்தோலிக்க மேற்றிராணியார் தனது மேற்றிராசன பள்ளிக்கூடங்கள் எல்லாவற்றிலும் நிகிருேப்பிள்ளைகளும் இடம்பெறக் கட்டளைசெய்திருக்கின்ருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி
### புரட்டாதி மாதம் — 1964.

| | | | |
|---|---|---|---|
| 20 | ஞா. | பெந்தக்கோஸ்திவுக்குப் பின்வரும் 18-ம் ஞாயிறு | [ப] |
| 21 | தி. | அர்ச். மத்தேயு | [சி] |
| 22 | செ. | அர்ச். வில்ல நோவா தோ | [வெ] |
| 23 | பு. | காலதினம் | [ஊ] |
| 24 | வி. | உபகார மாதா | [ப] |
| 25 | வெ. | அர்ச். கிளோவஸ் | [ஊ] |
| 26 | ச. | அர்ச். சிப்பி. யுஸ்தீனம்மா | [ஊ] |


# சத்தியவேத பாதுகாவலன்

1964-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 19-ந் திகதி


## ஐந்தில் வளையாதது ....

ஒருபிள்ளை முதன்முதலாகப் பள்ளிக்கூடத்துக்குப் போவதற்கு முன்னமே செபிக்க அறியாவிட்டால் அப்பிள்ளை தேவபக்தியில் வளருவது சந்தேகமான காரியமென்பது ஞானிகள் சிலரின் அபிப் பிராயம்.

வீட்டிலே பெற்றோரிடமிருந்து செபிக்கக் கற்றுக்கொள்ளாத பிள்ளை, வீட்டிலே ஒழுங்காகச் செபிக்காதபிள்ளை, பள்ளிக்கூடத் திலே மற்றப்பிள்ளைகளுடன் சேர்ந்து சொல்லும் செபங்களெல்லாம் வெறும் தொனியேயன்றி வேறன்று.

'செபம்' என்பது ஒன்று, 'செபிப்பது' என்பது இன்னொன்று. செபங்கள் தெரிந்தால் செபிக்கவும் தெரியுமென்று அர்த்தமன்று.

செபிக்கப் படிப்பிப்பது பெற்றோரின் கடமை. பிள்ளை பேச ஆரம்பிக்கும்பொழுதே செபிக்கவும் ஆரம்பிக்கவேண்டும். "தொட் டிலிற் பழக்கம் சுடுகாடுமட்டும்."

முக்கிய செபங்களிலுள்ள சொற்களைப் பிள்ளைகள் பிழையறக் கற்கவேண்டியது அவசியம். செபம் என்னவென்றும், எதற்காகச் செபிக்கிறோமென்றும், எப்படிச் செபிக்கவேண்டுமென்றும் அவர்கள் பச்சைப்பால்ய வயதிலிருந்து அறிந்திருக்கவேண்டியது அத்தி யாவசியம்.

தங்கள் தாயின் மடியிலிருந்தே சரியாகவும், ஒழுங்காகவும் செபிக்கப் பழகிய பிள்ளைகள் பிற்காலத்திலே பொதுவாக தங்கள் தேவபக்தியினாலும், நன்னடத்தையினாலும் மற்றோருக்கு ஒரு மேல் வரிச்சட்டமாக இலங்குகிறார்கள். அவர்கள் கெட்டழிந்துபோவது அரிது.

குழந்தைகள் செபிக்கப் பழகுவதற்கு அவர்களின் குடும்பச் சூழ்நிலை தேவபக்தி நிரம்பியதாய் இருப்பது அத்தியாவசியம். நடப் பதெல்லாம் தேவசித்தத்தின்படியே என்ற மனோபான்மை என்றும் நிலவவேண்டும்.

ஓர் உத்தம கத்தோலிக்கக் குடும்பத்தில் 'தேவன் எம்மத்தியில் என்றும் வசிக்கிறார்'என்ற பொதுஉணர்ச்சி அங்கத்தவர் ஒவ்வொரு வரினதும் பேச்சாலும், கிரிகையாலும் வெளிப்படையாகும். குறிக் கப்பட்ட நேரங்களிலே குடும்பத்துக்குச்சேர்ந்த எல்லோரும் தவருது கூடித் தேவனை வணங்குவார்கள். அக்குடும்பத்தின் முழுச்சீவிய முமே ஓய்வற்ற செபமாகத் துலங்குகின்றது.

இவ்வித குடும்பத்திலே உதித்து வளரும்பிள்ளை தானகவே தேவனை நாடுகிறது. அவருடன் சம்பாஷிக்க எத்தனிக்கிறது. தேவன் அப்பிள்ளைக்குத் தோழன் ஆகிறார்.

வீட்டிலே ஒழுங்காகச் செபிக்கும் பழக்கமில்லாத பிள்ளை பள்ளிக்கூடத்திலே மாத்திரம் செபங்கள் சொல்லுவதால் அடையும் பலன் மிகமிகச்சிறியது.

சின்னஞ்சிறிய வயதிலிருந்தே குழந்தைகளுக்குச் செபிக்கக் கற்றுக்கொடுப்பதும் தேவபக்தி நிறைந்த சூழ்நிலையைத் தங்கள் குடும்பத்திலே உருவாக்குவதும் பெற்றோரின் பாரியகடமை. நடுநடுக் கத்துடன் நிறைவேற்ற வேண்டிய கடமை. இக்கடமையை அலட் சியம் செய்யும் பெற்றோர் தம்பிள்ளைகளின் ஆத்தும இரட்சணியத் துக்கே ஆபத்தை உண்டாக்குகிறார்கள்.

குழந்தைகள் இவ்வுலகிற்குப் புதிதாகவந்து சேர்ந்த பிரயாணிகள். எனவே, அவர்கள் வழிதவறிச் செல்லாதிருக்க வேண்டுமாயின் நாம் அவர்களுக்கு ஒழுங்கான வழிகாட்டிக ளாய் இருக்கவேண்டும்.

"ஆடு ஒரு சிறுவாய்க்காலைத் தாண்டிச் செல்லின் அதைப் பின்தொடர்ந்து செல்லும் குட்டியும் அவ்வாறே செய்யும்" என்பது ஒரு சீனப்பழமொழி.

## இரண்டாம் வத்திக்கான்
### பொதுச் சங்கத்திற்காக செபம்
(6-வது சின்னப்பர் இயற்றியது)

சருவேசுரா சுவாமி, உமது மகத்துவத்தின் சிம்மாசனத்திலிருந்து உமது ஞானத்தை இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தின்மேல் வரவிடும்:

உமது திருவுளத்திற்குப் பிரியமானவைகளை அறிந்து, உமது வழிகளைக் கண்டுபிடிக்க சங்கத்திற் கூடியிருக்கும் உமது திருச்சபையின் ஆயர்களுக்கு உமது இஸ்பிரீத்துசாந்துவின் ஏழுவிதகொடைகளையும் பொழிந்தருளும்:

அவர்கள் உமது பிரகாசத்தால் கற்பிக்கப்பட்டு, உமது உதவியினால் ஆதரிக்கப்பெற்று, சத்தியத்தினதும் அன்பினதும் சம்பூரணத்தில் தவறினதைச் செவ்வையே நடத்தவும், கோணலானதை நேராக்கவும், சிதறினதை ஒன்று சேர்க்கவும், பழமைஅடைந்ததைப் புதுப்பிக்கவும், புதிய ஸ்தாபனங்களைச் சிருஷ்டிக்கவும் அவர்களுக்கு வழிகாட்டியருளும்.

இவ்விதமாய், எல்லாமக்களினதும் இரட்சணியத்துக்காக, உமது திருச் சபை இளமையின் மறுமலர்ச்சிபெற்று, தனது பரிசுத்தத்தினாலும், நீதியின் மேற்கொண்ட பேராவலாலும் அதிகமதிகமாய்த் துலங்கிப் பிரகாசிக்கவுஞ் செய்தருளும் சுவாமி, ஆமென்.

# தற்கால திருச்சபையின் பிரச்சனைகள்

(பி. சவரிமுத்து)

"தற்காலத் திருச்சபையின் பிரச் சினைகள் எவை?" என்று பிரபல்ய பத் திரிகை நிருபர் கருதினல் சுனென்ஸ் என்பவரைக்கேட்டபோது ஆண்டகை அவர்கள் "அவை மூவகைத்தன" என்று குறிப்பிட்டார். அவர் மேலும் தொடர்ந்து பேசியபோது முதலாவது பிரச்சினையானது எவ்வாறு அசமந்த கிறிஸ்தவர்களைச் சுறுசுறுப்பான கிறிஸ்தவர்களாக்கலாம்என்பதே என்று கூறினர். அதாவது, "ஞானஸ்நானம்" பெற்ற எல்லாக் கிறிஸ்தவர்களையும் எவ்வாறு ஞானஸ்நானம் பெற்றவர்க ளின் வாழ்க்கை வாழப்பண்ணலாம் என்பதே. "ஞானஸ்நானம்" என்ற சொல்லும் "அப்போஸ்தலத்துவம்" என்ற சொல்லும் ஒரே கருத்தையுடை யன. அப்போஸ்தலனல்லாதவன் எவனும் ஒரு கிறிஸ்தவன் அல்ல. இதையே பாப்பாசர்கள் எல்லோரும் ஒருவர்பின் ஒருவராக வற்புறுத்தி யிருக்கிறார்கள். இதையே மேற்றிரா ணிமாரும் உலகம்முழுவதிலும்போதித் திருக்கிறார்கள்.

குருக்களின் தொகை சொற்பமாகத் தற்காலத்தில் இருப்பதன்காரணமாகத் தான் சாதாரண கத்தோலிக்க மக்க ளின் சேவை தேவைப்படுகின்றது திருச்சபைக்கு என்று சொல்வது சரி யல்ல. இது ஒரு உபகாரணமாக, தற் செயலான நியாயமாக இருக்கலாம். இன்னும் 10,000 குருக்கள் மேலதிக மாகத் திருச்சபையில் இருந்தபோதி லும், சாதாரண கத்தோலிக்க மக்க ளின்சேவை திருச்சபைக்குத் தேவைப் படுகிறது—தேவைப்படும்.

ஞானஸ்நானத்தையும் சுவிசேஷத் தையும் (நற்செய்தியையும்) எங்களுக் குள்ளேயே வைத்திருப்பது முழுத் தவறு. அதை மற்றோருக்கு நாங்கள் கொடுக்கவேண்டும். மேலும் பிறருக்கு எங்கள் விசுவாசத்தைக் கொடுப்பதன் மூலம்தான் நாங்கள் எங்கள் விசுவாசத் தைப் பாதுகாக்கமுடியும். தருமஞ் செய்வதற்கு (பொருள் உதவி செய்வ தற்கு) இது முற்றும் முரணானது. ஏனெனில், பொருள் உதவியை நாம் கொடுக்கும்பொழுது அது நமக்குக் குறைகிறது. ஆனால், சத்தியத்தை (சுவிசேஷத்தை) நாம்பரப்பும்பொழுது விசுவாசம் எங்களில் அதிகரிக்கின்றது. ஆகவே, அதை எங்கள் நன்மைக்காக வே நாங்கள் பரப்புகிறோமென்று சொல்லமுடியும்.

தற்போதைய வாலிபப் பருவங்களை இவ்வித அறிவில் நாம் வளர்க்கவேண் டும். அதாவது, அப்போஸ்தலர்கள் அல்லாதவர்கள் கிறிஸ்தவர்கள் அல்ல என்ற உண்மையை அவர்களுக்கு எடுத்துவிளக்கவேண்டும். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் கிரமமாகப் பூசைக்குச்செல்லும் ஒருவரை ஒரு நல்ல கிறிஸ்தவன் என்று அழைக் கிறோம். பத்தியோடு தேவதிரவிய அனுமானங்களைப் பெறும் ஒருவரைச் சிறந்த கிறிஸ்தவன் என்று பொதுவாக நாம் நினைக்கிறோம். இது கிறிஸ்தவ வாழ்க்கையின் ஒரு பகுதி என்றே சொல்லவேண்டும். கிறிஸ்தவ வாழ்க் கையின் மற்றப்பகுதி நாம் பிறருக்கு என்னத்தைக் கொடுக்கிறோம் என்ப தைப் பொறுத்திருக்கிறது. இதுவும் மிகவும் பிரதானமானது.

எங்கள் ஞானோபதேச வகுப்பில், சின்னக்குறிப்பிடத்தில் ஒரு முக்கிய கேள்வி. "சருவேசுரன் ஏன் என்னைச் சிருஷ்டித்தார்?" என்பது. அதற்கு விடையாக "நாம் தம்மை அறிந்து, நேசித்துச் சேவிக்கவும், அதன்பின் மோட்சபாக்கியத்தை (சம்பாவனையை) அடையவுமே" என்று சிறுவயதில் படித்திருக்கிறோம். ஆனால், இக்கேள் விக்குமுழுவிடை பின்வருமாறு என்று கருதினல்சுனென்ஸ் பகர்ந்தார். "நான் சிருஷ்டிக்கப்பட்டது சருவேசுரனை நான் அறியவும், அவரைப் பிறரால் அறியப்பண்ணவும், அவரை நான் நேசிக்கவும், அவரைப் பிறரால் நேசிக் கப்பண்ணவும், அவரை நான் சேவிக்க வும், அவரைப் பிறரால் சேவிக்கப்பண் ணவும்அதன்பின்மோட்சபாக்கியத்தை **நாங்கள் எல்லோரும்** அடையவு மே." இதன்பிரகாரம் இவ்வுலக வாழ்க் கையின் நோக்கம், நான்மோட்சத்தை அடையவும், பிறர் மோட்சத்தை அடையப்பண்ணவும் என்றே கூற வேண்டியிருக்கிறது.

இக்கூற்று உண்மையாகில், இதற் காகவே நாம் இவ்வுலகில் வாழ்கிறோ மாகில், இது ஒரு புதுவாழ்வைக்குறிப் பிடுகிறது. இது என்னத்தைக்குறிக் கிறது என்பதைத் தற்போதைய கிறிஸ் தவர்களும் எதிர்காலக் கிறிஸ்தவர்க ளும் நன்குவிளங்கவேண்டும்.

கிறிஸ்தவசமயத்தின் உண்மைகளின் படி **சீவிக்கிற** எல்லோரும் கிறிஸ்தவ சமயத்தைப் **போதிக்கிறார்கள்** என லாம். சமயத்துறையில் போதனையும் சாதனையும் நாணயத்தின் இருபக்கங் களைப்போல ஒன்றோடொன்று நெருங் கிய தொடர்புடையனவாய் இருக்கின் றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகளிர் மன்றம்

அன்புச் சகோதரிகளே, வணக்கம்!

பாடசாலைகளெல்லாம் மறுபடி ஆரம்பித்துவிட்டன. பாலரெல்லாம் கையில் புத்தகச்சுமைகளுடன் பாடசாலைகட்கு விரைகின்றனர். "குங்குமம் சுமந்த கழுதை" போலல்லாமல் பாடப்புத்தகங்களின் அறிவை அவர்கள் கிரகிக்கின்றனராவென்பதை அவதானிப்பது ஆசிரியர்களின் கடமைமட்டுமல்ல, அன்னையரே! உங்களதும் கடமைதான். பிள்ளைகளுக்குப் படிக்கநேரமளியுங்கள். படிக்கும் பாடங்களைச் சொல்லிக்கொடுங்கள். படித்துக்கொண்டிருக்கும் பிள்ளைகளின் கிட்ட இருந்து அடுத்தவீட்டுக் கலியாணம், எதிர்வீட்டுச்சண்டை, முன்வீட்டுப் பையனின் தான்தோன்றித்தனம் இவற்றைப்பற்றிச் சம்பாஷித்து அவர்களது மனதை அங்குமிங்கும் அலையவிடாதேயுங்கள். பரீட்சைகள் அண்மிக்கொண்டிருக்கின்றன. பரீட்சையில் சித்திபெருமல் விட்டால் ஒருவருடச் செலவுகளும் வீணுகிவிடுமே. பிள்ளைகளுக்கும் கல்வியில் விருப்பமில்லாமல் போய்விடும். கல்வி மிகமிக முக்கியம்என்பதை மறந்துபோகாதேயுங்கள்.

—ரோஜா

# பரலோக அன்னையின் பாதுகாவலிலே!....

இத்தாலி தேசத்தில் ஒருகிராமமது. அங்கே ஏழைக் குடும்பமொன்று வசித்துவந்தது. கணவன், மனைவி, பெண்மக்கள் இருவர். வீட்டெசமானின் கடும் உழைப்பும், மனைவியின் ஒத்துழைப்பும் அவர்கள் வாழ்க்கைப் படகை வளம்பெற ஓட்டும் இரு துடுப்புகளாயின. ஆயின் அந்தோ! மக்களின் வாழ்வைக்கண்டு களிக்கவேண்டிய பருவத்தில் தந்தை இறைவனடி சேர்ந்தார் எதிர்பாரா விபத்தொன்றில் சிக்கி. என் செய்வாள் அன்னை; பதைத்தாள், துடித்தாள், காலம் அவள் கண்ணீரைத் துடைத்தது.

அன்னையும் அருந்தவப் புதல்வியருமாக வாழ்க்கையை நடாத்துவதற்காகக் கடினமாக உழைத்தனர். எனினும் அவர்கள் ஊதியம் உணவுக்கோ, உடைக்கோ, போதியதாக இருக்கவில்லை. இந்நிலையில் பெண்மக்கள் இருவரும் மணப்பருவத்தில் காலை வைத்தனர். பெற்றமனம் துடிதுடித்தது. "வாழ்க்கையை நடாத்தவே முடியவில்லையே. இப்பிள்ளைகளை எவ்விதம் விவாகம் செய்துவைக்கப்போகிறேனே" என்று எண்ணி எண்ணி மறுகினாள். இருந்தாற்போல் தேவ ஏவுதலால் ஒரு நல்ல எண்ணம் அவள் உள்ளத்தில் உதித்தது.

உடனே தன் இரு கன்னிகைகளையும் அழைத்துக்கொண்டு சென்றாள் கோவிலைநாடி. கன்னிகைகளின் தலைவியாம் தேவ அன்னையின் சொரூபத்தின் முன் முழந்தாட்படியிட்டனர் மூவரும். 153 மணிச்செபத்தைப் பக்தியாக ஓதினர். ஜெபம் முடிந்ததும் அன்னை மக்களைப்பார்த்து "உங்களை இன்றைக்குத் தேவதாயின் கரத்தில் ஒப்படைத்துவிட்டேன். இனிமேல் அவள்தான் உங்கள் தாய். நான் இனிமேல் உங்கள் தாயல்ல. இன்று தொடக்கம் 153 மணிச்செபத்தைத் தவருமல் சொல்லி அவள் ஆதரவை நாடுங்கள்" என்று கூறினள். சந்தோஷமாக வீடு திரும்பினர் மூவரும். இப்பக்திமுயற்சியைத் தினமும் கையாண்டுவந்தனர்.

மாதங்கள் நகர்ந்தன. அவர்களின் கடின உழைப்பு மேலதிக வருமானத்தைக் கொண்டுவந்தது. வீட்டில் செல்வம் கொழிக்கத்தொடங்கியது. தேவதாயின் பராமரிப்பு என்பதை உணர்ந்தனர் அம்மாதரசிகள். அவர்களது செல்வநிலை வெளியிலுள்ளவர்க்கும் தெரியவந்தது. அன்னையானவள் தன் பெண்சிறுருக்கு அழகிய வஸ்திரங்களை வாங்கிக்கொடுத்திருந்தாள். அவர்களும் அதை அணிந்துகொண்டு கோவிலுக்குச் சென்றார்கள். இருந்தாற்போல் அழகிய உடைகளுடன் அடிக்கடி காட்சியளிக்கும் இம்மங்கையரைக்கண்டால் அயல்வீட்டுப்பெண்கள் சும்மா இருப்பார்களா? வெறுமனே அசைந்த வாயில் அவல்கிடைத்தாற்போல் இந்த உத்தமிகளைப்பற்றி அபாண்டம் பேசத்தொடங்கினார்கள். "இச்சிறுமிகள் வேவுக்காரிகள்; யாரோ செல்வந்தனைத் தங்கள் கைக்குள் போட்டுவிட்டார்கள் போலிருக்கிறது" என்றாள் ஒருத்தி. "அழகிகளல்லவா? அழகிய உடம்பைப் பணயம்வைத்துச் செல்வம் தேடுகிறார்கள்" என்று வாயைமென்றாள் மற்றொருத்தி. தகாத நடத்தையினாலல்லாமல் இவ்விதம் பணம் சம்பாதிக்க முடியுமா? என்று வாதிட்டாள் வேறொருத்தி. இந்த ஆவலாதிகளோ காற்றில்பறந்து வந்து காதில்விழுந்தது இந்த உத்தமிகட்கு. என்செய்வார்கள்; திரும்பவும் தேவதாயின் பாதத்தில்விழுந்து இவ்வித அவதூறை நீக்கும்படி பிரார்த்தித்தார்கள்.

மார்கழிமாதம் எட்டாந்தேதி தேவமாதா மாசில்லாமல் உற்பவித்ததிருநாள் அது. அக்கிராமத்தில் இத்திருநாள் வெகு ஆடம்பரமாகக் கொண்டாடப்படும். அத்தினத்திலேயே இம்மங்கையரின் மாசற்றதனத்தைப் பிரசித்தமாக்க மரியன்னை எண்ணினள் போலும்.

கோவிலிலே ஜனம் நிறைந்து வழிந்தது. இந்த இரு மங்கையரும் அன்று திருநாளாதலால் அக்கிராம வழக்கப்படியே சற்று அலங்காரமாகவே உடையணிந்து சென்றனர். வேறு சுற்றுப் பட்டினங்களிலிருந்தும் அநேகர் அங்கு குழுமியிருந்தனர். இம்மங்கையரைக்கண்டதும் கோவிலிலே இருந்த சனங்கள் ஒருவருக்கொருவர் கண்ஜாடைகாட்டி அவதூறு பேசத்தொடங்கினர். அந்தவார்த்தைகள் இவர்கள் காதில் விழுந்தாலும் அவர்கள் அவதைரியப்படாது செபமாலையை ஓதிக்கொண்டிருந்தனர். பூசை ஆரம்பமாகி நடந்துகொண்டிருந்தது. திடீரென கோவிலுள்ளே பீடத்துக்குச் சமீபமாக இரண்டு ரோஜா மலர்முடிகள் அந்தரத்தில் காட்சியளித்தன. ஜனங்களெல்லாரும் திகைத்துப்போய் அம்முடிகளையே நோக்கியவண்ணம் இருந்தனர். அந்த இரண்டு மலர் முடிகளும் படிப்படியாக மெள்ள இறங்கி இந்த இரு மங்கையரின் தலையில் தரித்தன.

ஜனங்களெல்லோரும் இக்காட்சியைக்கண்டு திகைத்தனர். தாம் கூறிய அபாண்டம் எத்தகைய கொடிதென்று உணர்ந்தனர். பூசைமுடிந்ததும் அவர்களிடம் மன்னிப்புக்கேட்டனர். அவர்களைப் புகழ்ந்து கொண்டாடினர். இதுசெய்தி இத்தாலி இராச்சியம் முழுவதும் பரம்பத் தொடங்கியது.

இந்த உத்தமிகள் உலக ஆஸ்திகளில்லாதவர்களாயினும் மரியன்னைக்கு உகந்தவர்கள் என அறிந்துகொண்ட எத்தனையோ செல்வச் சீமான்கள் அவர்களை மணம்புரியப் போட்டிபோட்டனர். அவர்களின் அன்னையோ அச்சீமான்களுக்குள்ளே தேவபத்தி நிறைந்தவர்களும் குணசாலிகளுமான இருவரைத் தேர்ந்தெடுத்து தன் மக்களுக்கு மணம் புரிவித்தாள். பரலோக அன்னையின் பாதுகாவலில் வைக்கப்பட்ட பெண்கள் இருவரும் பூலோக வாழ்க்கையில் பூரண இன்பம் எய்தினர்.

# மாதர்க்கு!

மாது என்றால் அழகு என்று பொருள்; அதையே
மதியுள்ளார் பெண்குலத்திற் கிட்டுப் போந்தார்;
தீதில்லா எழில், குணங்கள் பெண்ணில் கண்டார்,
சிந்தித்தார்! பெருமைஎன்றார்! பெண்குலத்தால்!

●

அன்ன நடை பெண் நடைக்கு நாணும், காற்றில்
அசைகின்ற பூங்கொடியும் அவளைக் கொஞ்சும்
சின்னஇடை மின்னலென அஞ்சும் மேகம்
சிவந்த இதழ்வாய் சிரித்தால் முத்துதிரும்.

●

மான்என்பார் பெண்ணை அன்னம் மஞ்ஞைஎன்பார்,
வளர்மதியோ! தாமரையோ! வதனம் என்பார்,
கான்மயிலின் சாயல் என்பார்; இவ்வழகு பெண்கள்
கற்புநெறி தவறிவிட்டால் யாவும் பொய்யாம்.

●

கொஞ்சுகின்ற அழகைவிட, சீர்ததும்பும்
குணம் விளங்கக் குலப்பணிகள் வகையாய்ச் செய்யின்
விஞ்சுகின்ற புகழ்மேவும்! பெண்மை ஓங்கும்!
வெறும் அழகு குலப்பெருமை விளக்குமாமோ?

●

அன்புநிறை தாய், மனைவி, அத்தை, தங்கை
அறிவுள்ள சோதரியாய்க் கடமை செய்து
இன்ப ஒளி இல்லமதில் ஏற்ற வேண்டும்
இனிய அறிவழிகண்டு, தம்பெருமை காக்க வேண்டும்.

ஆசிரியர், ச. அமிர்தநாதர்.

# "ஆண்களிலும் பெண்களே ஆற்றல் மிகுந்தவர்கள்" என்கிறார் ஓர் அமெரிக்க வைத்திய நிபுணர்

"யாது காரணமோ அறியோம்; பெண்களின் விசேஷ பழக்கவழக்கங்கள் காரணமாய் இருக்கலாம். ஆனால், நிச்சயமாய் ஆண்களிலும் பெண்கள் பலகருமங்களில் ஆற்றல்கூடியவர்கள்."

இவ்வாறு இருதயநோய் சிகிச்சை நிபுணர் ஜோர்ஜ் கிறிபித் ஆதாரங்களுடன் கூறுகின்றார்.

(1) ஆண்குழந்தைகளிலும் பார்க்கப் பெண்குழந்தைகள் தாயின் கர்ப்பத்தில் கூடியகாலம் தங்கிஇருக்கின்றனர்.

(2) ஆண்குழந்தைகளிலும் பார்க்க பெண்குழந்தைகள் விரைவாகப் பேசத் தொடங்கிவிடுகிறார்கள்.

(3) ஆண்களிலும் பார்க்கப் பெண்களுக்குச் சொல்லாக்கம் பெரிது.

(4) அந்நியமொழிகளை ஆண்களிலும் பார்க்க விரைவாகப் பெண்கள் பழகிவிடுகின்றனர்.

(5) கொன்னைப்பேச்சு ஆண்களிலும் பெண்களில் மிகக்குறைவாகவே இருக்கின்றது.

(6) ஆண்களிலும் சிறந்த ஞாபகசக்தி பெண்களுக்கே உண்டு.

(7) சண்டை தொடங்குவதிலும் ஆண்களிலும் பெண்கள் ஆற்றல்கூடியவர்கள்.

(8) பொறுமையில் கூடியவர்கள் பெண்களே.

(9) ஒருவேலையை அழகாக ஆண்களிலும் பெண்களே செய்துமுடிக்கக் கூடியவர்கள்.

(10) மனக்களைப்பு, மனச்சோர்வு பெண்கள் ஆண்களிலும் குறைவாகவே அடைகின்றனர்.

# ஒற்றுமைக்காக மன்றாடுவோம்!..

❀ கத்தோலிக்கரல்லாதோரின் அதிசய விசுவாசத்தையும், நல்மனதையும் எடைபோடாது அவர்களது சமய அனுசரணையில் குறைகண்டு பிடித்தற்காக......

**ஆண்டவரே! எங்களை மன்னித்தருளும்!**

❀ கத்தோலிக்கரல்லாதோரின் நடத்தைகளை யிட்டு குறுகிய மனப்பான்மையுடனும், வீண்தீர்மானத்துடனும், கடுமையுடனும் நாம் நடந்துகொண்டதற்காக......

**ஆண்டவரே! எங்களை மன்னித்தருளும்!**

❀ கத்தோலிக்கரல்லாதோரின்முன் துன்மாதிரிகையாக நடந்து தேவனின் வரப்பிரசாதம் அவர்கள் ஆத்துமங்களில் வேலைசெய்யாதபடி இடறல் விளைத்ததற்காக......

**ஆண்டவரே! எங்களை மன்னித்தருளும்!**

❀ கத்தோலிக்கரல்லாதோர் உண்மை வெளிச்சத்தைக் காணும்படி ஊக்கத்துடனும், சகோதர சிநேகபாவத்துடனும் வேண்டுதல்செய்ய நாம்மறந்ததற்காக......

**ஆண்டவரே! எங்களை மன்னித்தருளும்!**

❀ பாஷைவிகற்பம், நிறவெறி, சாதிபேதங்களினால் வித்தியாசம்பாராட்டாமல் ஒரேகுரலாக உம்மைப் புகழ்ந்து பாட......

**ஆண்டவரே! எம்மை ஒற்றுமைப் படுத்தியருளும்!**

❀ எமது அறியாமைகள், விருப்பவீனங்கள், அழிவுப்பாதையை நாடும் கொள்கைகள் முதலியவற்றிலிருந்து எம்மை விடுவித்து ஒரேமந்தையாக உம்மைப் பின்சென்றுவர......

**ஆண்டவரே! எம்மை ஒற்றுமைப் படுத்தியருளும்!**

[தொடர்ச்சி மறுபக்கம்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருளும் உலகிலே

**சுவீடன் :**

வடசுவீடனில் சோர்போசா என்ற பட்டினம் உண்டு. இந்தப்பட்டினத்துக்கு இருபது ஜேர்மன் மாணவர்கள் வந்தார்கள். சுவீடனிலுள்ள அவர்களது நண்பர்களும் பலரும் சேர்ந்தார்கள். இந்தமாணவர்கள் அந்தப் பட்டின விசுவாசிகளுக்கென ஒரு அழகான ஆலயத்தைக் கட்டிமுடித்தார்கள். அண்மையில் அந்தப்பகுதி மேற்றிராணியாரான டக்டர் யோண் ரெயிலர் ஆண்டகை இந்த இருபது மாணவர்கட்கும் ஒருநல்ல உபசாரம் அளித்து அவர்களை வழியனுப்பினர்.

**ஜெருசலேம் :**

ஒலிவமலைச் சாரலில்நின்று தான் ஜெருசலேமை உற்றுப்பார்த்துக் கண்ணீர் சொரிந்தார் நமதாண்டவர். இந்தப்பகுதி பிரான்சீஸ்கன் சந்நியாசகர்களின் பாதுகாப்பில் இருக்கிறது. 1955-ல் தற்போது காணப்படும் சிற்றாலயம் அமைக்கப்பட்டது. இந்தப்பகுதியின் பக்கமாக புதைபொருளாராய்ச்சிப்பகுதியினர் நிலங்களைத் தோண்டி ஆராய்ந்து வருகின்றனர். இவர்களின் ஆய்வு நமதாண்டவர் காலத்திய தகவல்கள் பலவற்றைத் தரக்கூடுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**நியூயோர்க் :**

சர்வதேச கண்காட்சியில் வத்திக்கான் மண்டபம் உள்ளதல்லவா? இந்தக்கண்காட்சி கடந்த சித்திரை மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இதுவரை வத்திக்கான் மண்டபத்தைப் பார்வையிட்டவர்களின் தொகை ஐம்பதுலட்சத்துக்கும் அதிகமாய்விட்டதாம்.

**யப்பான் :**

இரண்டாவது உலகமகாயுத்தகாலத்தில் யப்பானிய இராணுவத்தில் "தற்கொலை விமானி"கள் பிரிவு ஒன்றிருந்தது. இந்தப் பிரிவைச்சேர்ந்தவர்களுள் அலோய் மாற்சுவும் ஒருவர். இவர் 1949-ல் கத்தோலிக்கமறையுள் சேர்ந்தார். 1954-ல் பிரான்சீஸ்கன் சபையில் இணைந்தார். தற்போது இவர் குருத்துவாபிஷேகம் பெற்றுள்ளார்.

**வாஷிங்டன் :**

கத்தோலிக்க செய்திகளை பத்திரிகை நிறுவனங்கட்கும வானொலி நிலையங்கட்கும் பரிவர்த்தனை செய்வது அமெரிக்காவிலுள்ள தேசிய கத்தோலிக்க செய்திச்சேவை நிறுவனத்தின் அலுவல். 40வருடங்கள் இந்த நிறுவனத்தின் தலைவராக சிறப்பான சேவையாற்றியவர் திரு.பிராங்ஹோல் என்பவர். சமீபத்தில் இவர் பதவியை விட்டு இளைப்பாறினர். இவரது சேவையைப் பாராட்டுமுகமாக பரிசுத்த பாப்பரசர் பெரியகிறகோரியாரின் நைற்பட்டத்தை வழங்கியுள்ளார்.

**செக்கோசிலவாக்கியா :**

இங்குள்ள கூட்டுப்பண்ணைகளைச் சேர்ந்த விவசாயிகள் தங்களிடையில் கடமையாற்றும் குருமார்களின் தொகையைக்குறைக்க அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகட்கு கண்டனம் தெரிவித்துள்ளார்கள். அண்மையில் இப்பண்ணையாளர்கள் கலாசார அமைச்சுக்கு அனுப்பியுள்ள விண்ணப்பமொன்றில் 1940-ல் தங்கள் பண்ணைகளில் 1200 குருமார் தொண்டாற்றினரென்றும் இத்தொகை தற்போது 700ஆக குறைக்கப்பட்டுள்ளதென்றும் குறிப்பிட்டுள்ளனர். தேவஅழைத்தலுக்கு விரோதமான நடவடிக்கைகள் குருமாரின்மேல் விதிக்கப்படும் வரிச்சுமை, பயங்கர நடவடிக்கைகள் என்பனவே இத்தொகைக் குறைவுக்கு காரணமென்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**பம்பாய் :**

இதுவரை பதினான்கு கர்தினால்கள் சர்வதேச சற்பிரசாத மாநாட்டுக்குச் செல்லப்போவதாக தெரிவித்துள்ளனர். கர்தினால்கள்: ஆகாஜியானியன், பியா, றுகாம்புவோ ஆகியோரும் வெனிஸ்நகர பிதாப்பிதாவான கர்தினாலும், பலர்மோ, வார்சோ, வீயன்னா, மனிலா, உல்றிச், மியூனிச், செண்ற் லூயிஸ், ஆகிய நகரங்களின் அதிமேற்றிராணிமாரான கர்தினால்களும் இவர்களுட் சிலராவர்.

**கொங்கோ :**

லெயோபோல்ட்வில் அதிமேற்றிராசன ஆயரான வங், ஸ்காலேயஸ் ஆண்டகை அப்பதவியிலிருந்து இளைப்பாறுகிறார். இவரைத்தொடர்ந்து அதிமேற்றிராணியாராக வருபவர் மொன்சிஞ்சோர் யோசவ் மாலுவலா ஆண்டகை. இவர் கொங்கோ வாசியாவர். கடந்த 5 வருடங்களாக இவ்வதிமேற்றிராசனத்தின் துணை ஆயராக கடமையாற்றிவருகிறார்.

**றோம் :**

கடந்தமாதம் 20-ந் திகதி புனிதரான பத்தாம் பத்திநாதர் இவ்வுலகைப் பிரிந்த ஐம்பதாம் ஆண்டுதினம் றோமையில் நினைவுகூரப்பட்டது. அத்தினத்தில் இப்புனிதரின் கல்லறைக்கு ஏராளமானோர் சென்று பிரார்த்தித்தனர். உலகின் பலபாகங்களிலுமிருந்து வந்த மலர்வளையங்களால் கல்லறைப்பீடம் முழுவதும் மூடப்பட்டிருந்ததாம்.

**இசிறவேல் :**

கார்மேல் மலையில் உள்ள கார்மலாயிட்ஸ் கன்னியர்மடத்தில் அண்மையில் எலியாஸ் தீர்க்கதரிசியை நினைவுகூரும் நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. இந்நிகழ்ச்சிகட்கு இசிறவேல்தேசத்தின் பலபாகங்களிலுமிருந்து ஏராளமானமக்கள் வருகைதந்து சிறப்பித்தனர். இவர்கள் பலமதங்களைச் சேர்ந்தவர்கள். இங்குள்ளகெபிஒன்றில் தான் எலியாஸ் தீர்க்கதரிசி வசித்தாரென பாரம்பரியங்கள் கூறுகின்றன.

**மால்டா :**

மால்டா மொழியில் சுவிசேஷம் மொழிபெயர்க்கப்பட்டுளது. மொழிபெயர்ப்பாளர் வண. சுவாமி செய்டன் அவர்கள். மால்டா சர்வகலாசாலையில் சுவிசேஷக பேராசிரியர் இவர். பொகிமிய, அராபிய மொழிகட்கு சார்பானது மால்டாமக்களின்மொழி. இம்மொழியைப் பேசுபவர்கள்தொகை சுமார் 5லட்சம் பேர்.

— சா. பெ.

* * *

உலகிலேயே மிக முதுமையான கோவில்மணி ரூஷியாவிலுள்ள ஓர் கத்தோலிக்க தேவாலயத்திலுண்டு. ஆலுஸ்மணி என்றபெயருடைய இந்த மணியின் வயது 900 வருடங்களாகும்.

* * *

மேற்றிராணியார் என்றபதம் முதலில் அந்தியோக்காவின் புனிதர் இக்னேஷியஸ் முதலாம் நூற்றாண்டில் எழுதிய நிருபங்களிலேயே காணப்பட்டது. அதன்பின்னரே ஆயர்கள், மேற்றிராணிமார் என அழைக்கப்பட்டனர்.

* * *

உலகிலேயே கலையழகில் முன்னணியில் திகழும் பிரசங்கபீடம் (பிரசங்கத்தொட்டி) பவேரியாவில் உள்ள அமோர்பாக் நகர தேவாலயத்தில் காணப்படுகிறது.

* * *

சீயன்னாவை தம் பிறப்பிடமாகக் கொண்டவர் அர்ச். அன்சானுஸ் அவர்கள். இவர் [illegible] காவலராகக் [illegible]

## கடவுள் ஒருவர் உண்டதனால்

ஏ. பி. வி. கோமஸ்

கடவுள் ஒருவர் உண்டதனால்
கனிந்த வாழ்க்கை நமக்குண்டு
இடையில் துன்பம் வந்திட்டால்
இதற்கும் காரணம்உண்டு!

●

இன்னல் வந்து போய்விடும்பின்
இனிய வாழ்க்கை தொடர்ந்திடும்
செந்நெல் வேண்டு மென்றாலும்
நன்னிலம் காயப் படவேண்டும்!

●

பன்ன லங்கள் தந்துவிடும்
பரமன் வினைக்கு(க்) காரணம்ஏன்?
உள்ளம் தூய்மை யாகிவிட்டால்
உலகில் யாவும் இன்பமயம்!!

●

கோயில் குளங்கள் சென்றாலும்நம்
"கோயி லா"மிவ் வுள்ளந்தான்
தூய்மை யில்லா திருந்திட்டால்
துன்பம் என்றும் துன்பமே!!!

## ஒற்றுமைக்காக...

(மகளிர்மன்றத் தொடர்ச்சி)

❀ பலவிதமான விஞ்ஞான அறிவுகள், சமய அபிவிருத்தி, கல்வியறிவு ஆதியவற்றால் நாம் உண்மை நெறியினின்று தவறாமல் உம்மை ஒரே மேய்ப்பனாக ஏற்றுக்கொள்ள......

**ஆண்டவரே! எம்மை ஒற்றுமைப் படுத்தியருளும்!**

❀ தேவனே உமது மாபெரும் மகிமைக்காக......

**பிரிந்துபோன எம் சகோதரரை எம்முடன் சேர்த்தருளும்.**

❀ தேவனே! உண்மைத்தனத்தினதும், நன்மைத் தனத்தினதும் வெற்றிக்காக......

**பிரிந்துபோன எம் சகோதரரை எம்முடன் சேர்த்தருளும்.**

❀ தேவனே! ஒரேமந்தையும் ஒரே மேய்ப்பனும் இவ்வுலகில் விளங்கும்படியாக.......

**பிரிந்துபோன எம் சகோதரரை எம்முடன் சேர்த்தருளும்.**

தேவனே! உலகமடங்கலும் இன்ப சமாதானம் நிலவும்படியாக.......

**பிரிந்துபோன எம் சகோதரரை எம்முடன் சேர்த்தருளும்.**

❀ தேவனே! உமதுமைந்தன் யேசுவின் இதயம் சந்தோஷ வெள்ளத்தில் மூழ்கும்படியாக.......

**பிரிந்துபோன எம் சகோதரரை எம்முடன் சேர்த்தருளும்.**

[தமிழாக்கம்]


## அறிவிப்பு

எதிரேவரும் ஐப்பசிமாதம் 3-ந் திகதி பி. பகல் 2-00 மணிக்கு அச்சுவேலி செண்ற் தெரேசா பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி நடைபெறும். அன்றையதினம் அவ் விளையாட்டுப்போட்டிக்கு மேற்படி பாடசாலையிற் கல்விபயின்ற பழைய மாணவர்கள், அவர்களது பெற்றோர், உற்றோர், உறவினர், அன்பர்கள், உபகாரிகள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

பாடசாலைத்தலைவி.

● நோர்வேதேச லுண்டெண்நகரிலுள்ள தொமினிக்குவின் ஏகாந்த சபைக் கன்னிகாமடத்தில் இருந்துவருகின்ற சங். சனிலா கன்னியாஸ்திரி தான் உலகில் ஒருபுரொட்டஸ்தாந்த மேற்றிராணியாரைத் தனதுடன் சகோதரராகக் கொண்டுள்ள ஒரேயொரு கன்னியாஸ்திரியென அறியப்படுகின்றாள். சமீபத்திலே இவளின் சகோதரர் ஹாமார்நகரின் லூத்தேர் சபை மேற்றிராணியாராக அபிஷேகஞ் செய்யப் படலாயினர்.


# அல்ஸ்ட்ரன் மீன்பிடி வலைகள்




அல்ஸ்ட்ரன் மட்டுமே இவ்வனுகூலங்கள் அனைத்தையும் அளிக்கவல்லது.

CIC அல்ஸ்ட்ரனின் விசேஷத் தன்மைகளை மற்ற நார்களுடன் ஒத்திட்டுக் காட்டும் இலவசப் புத்தகம் ஒன்றை பெற இன்றே எமக்கு எழுதுக.

கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ்(கொழும்பு)லிமிடெட்,
தபால் பெட்டி 352, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தைகள் சகாப்தத்தில் மரியன்னை

[வே. அன்ரனி ஜோண்]

மரியன்னையைப் புகழாத ஒரு புனிதரும் மோட்சத்தில் இல்லை. மோட்சம் செல்ல எங்கள் எல்லோருக்கும் உதவி அளிக்கும் மாதா—மரியன்னையே. விண்ணுலகத் தந்தையிடம் எங்களை அழைத்துச் செல்லும் மத்தியஸ்தர் — யேசுக்கிறீஸ்து; யேசுவினிடம் எங்களை அழைத்துச்செல்லும் மத்தியஸ்தி—மரியன்னையே. கிறிஸ்துமறையின் ஆரம்பகாலம் தொடக்கம் இன்றுவரையும் மரியன்னை திருச்சபையில் அதிமுக்கிய பாகத்தை வகுக்கின்றுள். இதை உணர்ந்தனர் இறை நூல் வல்லுநர்கள். அவளின் மங்கா மகிமையைப்பாடியுள்ளார்கள். அவளின் புகழைப்பரப்பியுள்ளார்கள். திருச்சபையில் தலைசிறந்து விளங்கும் தந்தைகள் சிலர் மரியன்னையைப்பற்றிக் கூறியுள்ளதைச் சற்று ஆராய்வோம்.

**புனித ஜஸ்டின்:** ஏவாள் தனது கீழ்ப்படியாமையால் உலகுக்கு மரணத்தைக் கொண்டுவந்தாள். மரியாய் தனது தாழ்ச்சியாலும், கீழ்ப்படிவாலும் உலகுக்குச் சீவியத்தைக் கொண்டுவந்தாள்.

**ரேட்டுலியன்:** ஏவாள் சர்ப்பத்தை நம்பினுள். மரியாய் கபிரியேல் என்னும் சம்மனசை நம்பினுள். ஏவாள் பிசாசை நம்பி நாசமாய்ப் போனுள்—மரியாய் சம்மனசை நம்பி ஏவாளின் குற்றத்தை அழித்து எங்களைக் காப்பாற்றினுள்.

**புனித இரணியஸ்:** ஏவாள் தனது கீழ்ப்படியாமையால் தனக்கும் மனுக்குலத்துக்கும் மரணத்தைக் கொண்டுவந்தாள். கன்னிமரி தனது கீழ்ப்படிவால் தனக்கும் மனுக்குலத்துக்கும் இரட்சணியத்தை அளித்தாள்.

**புனித அம்புரோஸ்:** இஸ்ருயேல் மக்களை வனந்தரத்தில் வழிகாட்டிய மேகமும், நெருப்புத்தூணும் மரியன்னையைக் குறிப்பிடும். மரியன்னையிடம் அருள் நிரம்பியிருந்தது—தன்னை அண்டிவருகிறவர்களுக்குத் தன்னிடம் இருந்த அருளை அளிக்க அவள் தயங்கவில்லை.

**புனித புரோக்கிளஸ்:** விலைமதிக்கப்படாத முத்தைப்பெற்ற களங்கமற்ற மாசற்ற லில்லிமலர்.

**புனித புல்ஜென்சியஸ்:** மரியாய் விண்ணுலகத்தின் சன்னல்; இறைவன் இந்தசன்னல்மூலம் உலகின் ஒளியை உலகுக்கு உவந்தளித்தார். மரியாய் மோட்சத்தின் ஏணி—இந்த ஏணிமூலம் கடவுள் உலகுக்குவந்தார்.

**புனித எப்றெம்:** தெய்வீகத்தைச் சுமந்துசெல்லும் மோட்சம்—மரியாய்.

**புனித அன்ரியோக்கஸ்:** வாழ்வின் அன்னை, அழகின் அன்னை, விடியற்காலத்தின் நட்சத்திரம்.

வனந்தரத்தில் மோசேஸ் கண்ட முட்செடி.

மரியே உமக்குப் புகழ் உண்டாவதாக.

# விமானியான மேற்றிராணியாரின் விசாரணைத் தொண்டு

குருவானவர்ஒருவர் சுவிசேஷம் போதிப்பதற்காக என்றேஒருநாள் ஒருபட்சியைப்போல 9,52,000மைல் தூரம் பறந்துசெல்வாரென்று இற்றைக்கு 2,000வருடங்களின்முன் எவரேனும் தீர்க்கதரிசிஒருவர் சொல்லியிருந்தால் இந்தத்தரிசனம் மனதுக்கெட்டாததொன்றென எவருமே நம்பியிருக்கமாட்டார். ஆனுல், கி.பி. 1948-ம்ஆண்டுக்கும், 1964-ம்ஆண்டுக்குமிடையே "நியூகினியாவின் பறக்கும் மேற்றிராணியார்" இதனைச்சாதித்திருக்கின்றுர்:

வீவாக்கின் விக்கார் அப்போஸ்தலிக்குவான லேயோ ஆக்பெல்ட்மேற்றிராணியார் 1948-ம்ஆண்டு விமானிக்குரிய லைசென்ஸைப் பெற்றுக்கொண்டதுமுதல் தமது ஞானவிசாரணைகளை நடத்துவதற்காகச் சிறுசிறுதூரமாகத் தம்முடையவிமானத்தில்பறந்து உலகத்தை 28முறை சுற்றிவரக்கூடியதூரம் பிரயாணஞ் செய்திருக்கின்றுர். "போய்ச் சுவிசேஷத்தைப் போதியுங்கள்"என்று கிறிஸ்துநாதர் தமதுஅப்போஸ்தலர்களுக்குத் திருவுளம்பற்றியபோது, அவர்கள்நடந்தோ, சவாரிசெய்தோ, வாகனத்தைச்செலுத்தியோ, விமானத்தில்பறந்தோ, அன்றேல் யாதொன்றின்மூலம் போக்கப்பட்டோ செல்லவேண்டுமென்று வகுத்துக்கூறவுமில்லை; எங்கெங்கே சுவிசேஷத்தைப் போதிக்கவேண்டுமென்று எல்லைக்கட்டுப்பாடு செய்யவுமில்லையென்று ஆகாயப்பிரயாணியான இந்தமேற்றிராணியார் சாதிக்கின்றுர்.

சுவிசேஷதொண்டுக்கென ஆகாய விமானங்களை வீவாக் விக்காரியத்திலே பயன்படுத்துவது அவசியமெனக் கருதுகின்ற இவர் அன்று பேசியபோது: நீர்மேகம்நிறைந்த நியூகினியாவின் காடுகளுக்கூடாக ஒருபகல்முழுவதும் நடப்பதும், ஏழு நிமிஷம் விமானத்திலே பறந்துசெல்லுவதும் சரிதானென்றும், 75நிமிஷம் மோட்டர்காரில் செல்வதற்குப் பதில் 20நிமிஷம் ஆகாயவிமானத்தில் பறந்துசெல்வது இலகுவென்றும் தெரிவித்துநின்றுர். வீவாக் விக்காரியத்திலே இன்று கத்தோலிக்க மிஷனரிமார் நான்குஆகாயவிமானங்களைப் பயன்படுத்திவருகின்றுர்கள்.

# போலிஷ் கத்தோலிக்க........

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

மிகப்பெரும் சனத்திரளைக் கலைக்க போலிஸ்இராணுவம் துணியவில்லை.

"போலாந்து முழுவதிலும் என்றுமில்லாத விதமாகப் பெருந்தொகையான கத்தோலிக்கமக்கள் 'பிரகாசமான சூரியவெளிச்சமுள்ள வானிலையிலே' திவ்விய சற்பிரசாத சுற்றுப்பிரகாரங்களில் கலந்துகொண்டார்கள்" என்று வாஷோநகர வானெலி யாதும்வர்ணனையின்றி அறிவித்தது. லண்டன்நகரிலே போலாந்திலிருந்து திரும்பிய விமானப்பிரயாணிகளோ, "திருநாளன்று காணப்பட்டது போன்ற அத்துணை பெரும் வேத பத்தி வைராக்கியத்தைத் தாங்கள் ஒருபோதுமே கண்டதில்லை" யென்றும், "இத்தாலி, ஸ்பெயின், போர்த்துக்காலிலே அத்துணை வெளியரங்கமாகக் காண்பிக்கப்பட்ட பத்திப்பரவசம் நிறைந்த காட்சியைத் தாணும் அது கடந்துவிட்ட"தென்றும் கூறினுர்கள்.

வாஷோநகரிலே சற்பிரசாத சுற்றுப்பிரகாரத்தைக் கர்தினல் விசின்ஸ்கி ஆண்டகை தலைமைவகித்து நடத்தினுர். கம்யூனிஸ்த கட்டுப்பாட்டின் கீழுள்ள அந்நாட்டின் தலைநகரிலே சந்தாணுள் ஆலயத்திற்கு வெளியே அவருடைய பிரசங்கம் நடத்தப்படலாயிற்று.

# சுயநாட்டிலிருந்து தப்பியோடிய போலிஷ் குருவானவர்

சமீபத்திலே ஓர்அமெரிக்க தம்பதிகளின்காரிலே போலிஷ்குருவானவர் ஒருவர் தமதுநாட்டிலிருந்து தம்முடையதலையை விருந்துணவுக்கூடையொன்ருல் மறைத்துக்கொண்டு அதிகமனத்துணிகரமாக ஆஸ்திரியாவுக்குத் தப்பியோடலாயினர். வண. ஹென்றி குறென்டெக் எனும் 31வயதுடைய இக்குருவானவர் அந்தக்காரின் தளத்திலேதொகையானபயணச்சாமான்களின் கீழ் மறைத்துவிடப்பட்டார். தமக்கு இந்த ஆருதவியைச்செய்தஅமெரிக்க தம்பதிகளின் தைரியத்தை அவர் புகழ்ந்துபாராட்டுகின்றுர். ஆயினும் பாதுகாப்பு முகாந்திரமாக அவர்களை இன்னுரெனத் தாம்அறிவிக்கப்போவதில்லையெனத் தெரிவிக்கின்றுர்.

அரசாங்கத்திற்கெதிரான கருமங்களில் ஈடுபட்டாரென்று சொல்லப்பட்டதற்காகப் போலிஷ்நீதிஸ்தலம் ஒன்ருல் இவர் இரண்டுவருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டபோதுதான் அவரின் ஒளித்தோடும் படலம் ஆரம்பமானது. அரசாங்கத்தின்நலனுக்குப் பாதகமானதென்றுகருதப்பெற்ற சட்டசம்பந்தமானகருமம்ஒன்றிலே மற்ருேர் போலிஷ்காரருக்கு உதவிசெய்ததாகக்குற்றஞ்சாட்டித் தம்மீதுவழக்குத்தொடரப்பட்டதாகவும், சிறிதுகாலம் சிறைவைக்கப்பட்டபின் விசாரணைசெய்து தாம்குற்றவாளியாக்கப் பட்டதாகவும் இவர்கூறுகின்றுர். என்றுலும் நீதிஸ்தலம் இவருக்கு ஆடிமாதம்1-ந்திகதிவரை "நிபந்தனைக்குட்பட்ட விடுதலை" அளித்தது. அதன்மேல் இவர் தமக்குவிதிக்கப்பட்டதண்டனையை நிறைவேற்றத் தொடங்கவேண்டியிருந்தார். இந்தஇடைப்பட்டவிடுதலைகாலத்தில்தான் இவர் மேல்நாடு ஒன்றுக்குத் தப்பியோடத் தீர்மானித்தார்.

போலிஷ்மக்கள் பிரயாண அனுமதிச்சீட்டோ அன்றேல் விசேஷ அனுமதிப்பத்திரமோ இல்லாது யூகோசிலேவியாவுக்கு அணிவகுத்து நடத்தப்படும் சுற்றுப்பிரயாணங்களிலே கலந்துகொள்ளலாம். இந்த வகையிலே இவரும்பிரயாணஞ் செய்து யூகோசிலேவியாபோய்ச் சேர்ந்ததும் ஆஸ்திரியஎல்லையிலே தமதுகுருத்துவஅங்கியோடும்,ஏனையவற்றேடும் அந்நாட்டுக்குச்செல்லும் தம்பதிகளின்பிரயாணக் கார்களையெல்லாம் விரல்அடையாளங்காட்டி நிறுத்தி அவற்றில் ஏறமுயன்றுவந்தார். ஆனுல், இவரதுபிரயாண அனுமதிப்பத்திரங்களின் குறைபாடுகளையிட்டு அநேகதம்பதிகள் ஆஸ்திரியாவுக்கு இவரைக்கொண்டு செல்ல மறுத்துவிட்டார்கள். அதனுல் சுதந்தரத்திற்காக எல்லையைக் கடப்பது இவருக்குப்பெருங்கஷ்டமாயிற்று. கடைசியாகமுன்சொன்ன அமெரிக்கதம்பதிகள் மனந்துணிந்து இவரை ஏற்றிச்செல்ல உடன்பட்டார்கள்.

இவர் ஆஸ்திரியாபோய்ச்சேர்ந்ததும் அந்நாட்டுஅதிகாரிகளிடம் புகலிடம்அளிக்குமாறு மனுப்பண்ணலாயினர். கடந்தஒன்பதுவருடங்களிலே இவ்விதம்நடந்துகொண்ட முதலாவதுகுருவானவர்இவரே. தற்போது ஆஸ்திரியாவின் தலைப்பட்டணமாகிய வியன்ஞநகர குருமடமொன்றில் இவர்தங்கியிருந்து, அரசியல் புகலிடம் அருளுமாறுகேட்டுச் செய்துகொண்ட தமதுமனுவின் பதிலை எதிர்பார்த்திருக்கின்றுர். ஆஸ்திரியாவிலே தங்கியிருப்பதுஇவருடைய கருத்தல்ல. தாம் உறவினர்களைக் கொண்டுள்ள சிக்காகோ நகரில்போய்க் குடியேறவேண்டுமென்றுதான் ஆசிக்கின்றுர்.

உங்கள் சந்தாவை அனுப்பிவிட்டீர்களா?

# லூர்துபதிக்கு அங்கிளிக்கன் சபையினர் யாத்திரை செய்கின்றனர்

சென்றமாசத்திலேதான் அங்கிளிக்கன் கிறீஸ்தவசபையினர் உத்தியோகமுறையில் முதன்முதல் லூர்துபதிக்கு யாத்திரை சென்றிருந்தனர். அந்த யாத்திரைக்குத் தலைமைதாங்கிய வில்பிறெட் வெஸ்ரோல் என்னும் அங்கிளிக்கன்சபை மேற்றிராணியாரே மேலும் அங்கிளிக்கன் சபையினர் அடங்கிய யாத்திரிகர் கோஷ்டியொன்றை அடுத்தவருடத் தொடக்கத்தில் அங்கு கொண்டுசெல்ல லூர்துபதி மேற்றிராணியாருக்கு விண்ணப்பஞ் செய்திருக்கிறுர். கிறீஸ்தவ சபைகளின் ஐக்கியத்துக்காக தனது சேவைகளை அர்ப்பணித்த திரு. கோல்மன் என்பவரே இவ் விண்ணப்பத்தை அங்குகொண்டு சென்றுர்.

# கர்தினலின் பிரமிப்பு

ஐக்கியஅமெரிக்கதேச பொஸ்ரன்நகர அதிமேற்றிராணியாராகிய கருதினல் குஷிங்அவர்கள் அண்மையில் தென்அமெரிக்காவுக்குச் சென்றிருந்தார். அங்கே உள்ள விசுவாசத்தின் உறுதி அவருக்குப் பிரமிப்பு அளித்தது. காலகதியில் லத்தீன் அமெரிக்காவே மேல்நாட்டு நாகரிகத்தில் விரும்பத்தகுந்த அம்சங்களின் கோட்டையாக இருக்குமெனவும், அதற்கு கத்தோலிக்க விசுவாசமே காரணமாகும் எனவும் அவர்கூறினுர்.

# செக்கோ சிலாவியாவில் விசுவாசம் அழியவில்லை

ஐக்கியஅமெரிக்காவில் உள்ள செக்கோசிலாவாக்கிய இனத்தவரின் தலைவர்களில் ஒருவராகிய வண. சிஸ்காசுவாமியார் அண்மையில் ஐரோப்பாவில்செய்த பிரயாணங்களின்பின் அவ்வூரில் வேதவிசுவாசம் அழிந்துபோகவில்லையெனவும், திரளானமக்கள் கோவில்களுக்குச்சென்றுவருகின்றுர்களெனவும், குருமார் கன்னிகாஸ்திரிகளின் சேவை மட்டுப்பட்டிருந்தபொழுதிலும் மக்கள் விசுவாசம் உடையவர்களாய் இருக்கின்றுர்கள் எனக் கூறியிருக்கின்றுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுச் செய்திகள்

## காணிப்பங்கீடு

யாழ்ப்பாண மாவட்டத்திலே நடுத்தரவகுப்பினருக்கான அநேககாணித்துண்டுகள் சமீபத்தில் பங்கீடுசெய்யப்படவிருக்கின்றன. கிராஞ்சி, பரந்தன், முல்லைத்தீவுவீதி, கல்மடு, புளியம்பொக்கணை, பலாலி, துனுக்காய், கோரக்கன்கட்டு ஆகிய விடங்களிலே இந்தக் காணித்துண்டுகள் உள்ளன. இம் மாதம் 21-ந்திகதிக்குள் யாழ்ப்பாண அரசாங்க அதிபருக்கு விண்ணப்பங்கள் அனுப்பப்படவேண்டியன.

## இரட்டைத்தட்டு பஸ்கள்

யாழ்ப்பாணத்திலே இரட்டைத் தட்டுபஸ்களை ஓடவிடுவதற்கு ஒருமுன்னேற்பாடாக ஒருஇரட்டைத்தட்டுபஸ் சென்றவியாழக்கிழமை யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளது. இரட்டைத் தட்டுபஸ்களை இங்குசெலுத்துவதற்கு தெரிவுசெய்யப்படும் சாரதிகளைப் பயிற்றுதல்முதலாம் ஆரம்பஏற்பாடுகளைச் செய்வதற்கு இது பயன்படுத்தப்படும். இதனைத்தொடர்ந்து இம்மாதத்திலே பத்துஇரட்டைத்தட்டுபஸ்கள் இங்கு வந்துசேரும். இத்தொகை பிந்தஇருபதாக அதிகரிக்குமாம். யாழ்ப்பாணம்–பலாலி–கீரிமலைவீதியிலும், யாழ்ப்பாணம் கச்சேரிவீதியிலும், யாழ்ப்பாணம்–கொடிகாமம்வீதியிலும் இந்த பஸ்கள் ஓடவிடப்படும்.

## ஆசிரியரும் இடமாற்றமும்

இடமாற்றம் கேட்கும் ஆசிரியர்கள் நிகழும் புரட்டாசிமாதம் முடிவதற்குள் மனுப்பண்ணிக்கொள்ள வேண்டுமென்று வித்தியாதிபதி முடிவுசெய்திருக்கிறார். உதவி வித்தியாதிபதிகளுக்கும், கல்விஅதிகாரிகளுக்கும் இந்தமுடிபு அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறது. அதன்பேரில் இவர்கள் வட்டார வித்தியாதரிசிகளின் மகாநாடு ஒன்றை உடனேதானே நடத்திக் கல்விப்பகுதியின் புதிய இடமாற்ற திட்டவிஷயமாய்ச் செய்ய வேண்டியவைகளைத் தெரிவிக்கவேண்டும்.

## அநீதி இழைக்க விடமாட்டேன்

"சனப்பிரதிநிதிகள் சபையிலே ஓர் அங்கத்தவராகத் தொடர்ந்து இருக்கிற வரையில் கத்தோலிக்கருக்கு என்றுமே அநீதி இழைக்கப்படாது பார்த்துக்கொள்ள என்னால் இயன்ற மட்டும் நான்செய்வேன்" என அன்று கண்டிக் கத்தோலிக்கசங்க விழாவிற்கும், பரிசளிப்பிற்கும் சமுகமளித்துப் பேசிய செங்கடகல எம். பி. திரு. ஷெல்டன் ரணராஜா கூறலாயினர். சங்க சங்கத்தலைவர் எழுந்து பிரதம விருந்தாடிகளான அவரையும், அவர் பாரியாரையும் வரவேற்றுப் பேசியவிடத்து, "ஓர் ஐக்கிய இலங்கையை உருவாக்க வேண்டுமெனும் இலட்சியத்தைத் தாம் கடைப்பிடித்து நிற்பதைத் தட்டுத்தடக்கின்றித் தெளிவான பாஷையிலே எடுத்துக் கூறுவதற்கு அவர் கொண்டுள்ள மனநிதானத்தின் தைரியத்தையிட்டு"த் திரு. ரணராஜாவுக்குப் பெரும் பாராட்டுரை வழங்கினர். தொடர்ந்து திருமதி ரணராஜாவால் வெற்றியீட்டியவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

## எம். பி. களின் நடவடிக்கை

1963-ம் ஆண்டின் 11-ம் இலக்க நிதிச்சட்டத்தின்கீழ் காணிகளைப் பதிவுசெய்யும் விதிகளை எதிர்த்துக் காணிகள் பதிவுசெய்யும் றெஜிஸ்ரார்மீது சுப்பிறீங்கோட்டிலே வழக்குத்தொடரத் தமிழ் எம். பி. களும். முஸ்லீம் எம். பி. களும் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். தமிழ்ப்பிரசைகளும், முஸ்லீம் பிரசைகளும் காணிகளைப் பதிவுசெய்துகொள்வதில் ஏற்படுகிற பெரும்சங்கடங்கள் காரணமாகவே இந்தநடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாகத் தெரியவருகிறது.

## சவேரியாரின் திருமேனிக் காட்சி

சிந்துதேச அப்போஸ்தலரான அர்ச். பிரான்சீஸ் சவேரியாரின் திருமேனிக் காட்சி வருகிற கார்த்திகை 24-ந் திகதி செவ்வாய்க்கிழமை கோவைநகரிலே ஆரம்பமாகுமெனச் சென்ற 8-ந் திகதியன்று பஞ்சிமிலிருந்து அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## மற்றும் ஒரு பஸ்விபத்து

யாத்திரை பஸ்ஒன்றும் புரண்டதாலும், இருபஸ்கள் எதிர்முட்டாக மோதியதாலும் சமீபத்தில் இரு பஸ்விபத்துக்கள் நிகழ்ந்து அவற்றால் அநேகர் காயமடைய, சிலர் மரணமடைந்தனர். இவற்றைத்தொடர்ந்து அம்பாறையிலே சென்ற 9-ந் திகதி யன்றிரவு மற்றுமோர் பஸ்விபத்து நிகழலாயிற்று. இதிலே சென்ற 25 பிரயாணிகளில் 19பேர் காயமடைந்தனர், இவர்களில் நால்வர் அபாயகரமான நிலையிலே காணப்பட்டு மட்டக்களப்பு ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்டார்கள்.

## ஜப்பானிய ரையர்கள்

ஜப்பானிடமிருந்து ரையர்களும், ரியூப்புகளும் வாங்குவதற்கென்று இலங்கைக்கு ஜப்பானிய அரசாங்கம் 16 இலட்சமுதல் 20 இலட்சம் வரை அமெரிக்க டலர்களைக் கடனாகக் கொடுக்கவிருக்கின்றது. இந்தக்கடனை இலங்கை அரசாங்கம் பின்னொருகாலம் இலகுவான தவணையிலே திரும்பிக் கொடுக்குமெனத் தெரியவருகிறது.

## தலைமன்னார் கிராமச்சபை

தலைமன்னார்ப்பகுதியை உள்ளடக்கியதாய்த் தற்போது 19 வட்டாரங்களைக் கொண்ட மன்னார் மேற்கு–அதாவது பேசாலைக் கிராமச்சபை இரண்டாகப் பிரிக்கப்படடுத் தலைமன்னாருக்குத் தனிக்கிராமச்சபை அந்தஸ்து அளிக்கப்பட்டிருக்கிறது. இனிமேல் பேசாலைக் கிராமசபை 15 வட்டாரங்களையும், தலைமன்னார்க் கிராமசபை 7 வட்டாரங்களையும் கொண்டதாய் இயங்க விருக்கிறது.

## 32,000 பரீட்சார்த்திகள்

வருகிறமார்கழிமாத முதல்வாரத்திலே நடைபெறவிருக்கும் கல்விப்பொதுத்தாராதரப் (உயர்தர)பரீட்சைக்குச் சுமார்32,000பரீட்சார்த்திகள் தோற்றவிருக்கிறார்கள். சர்வகலாசாலைப் புகுமுகப்பரீட்சை எச்.எஸ்.சி., பரீட்சையாகிய இருபரீட்சைகளுக்கும் பதிலாகவே இப்பரீட்சைமுதன்முறையாக நடைபெறுகின்றது. இப்பரீட்சைமுடிவுகளின் அடிப்படையில் ஏறக்குறைய மூவாயிரம்மாணவர்கள் இலங்கைச் சர்வகலாசாலையிலே உயர்தாகல்பெற அனுமதிக்கப்படுவார்களெனத்தெரியவருகிறது.

## புதிய அட்வக்கேற்

நல்லூர்எம். பி. டக்றர் ஈ. எம். பி. நாகநாதன் அவர்களின் இரண்டாவது புதல்வியான செல்விஜூன் நிர்மலா விஜயலட்சுமி எல். எல். பி அவர்கள் இலங்கைச் சுப்பிறீங்கோட்டின் அட்வக்கேற்றாகச் சென்ற9-ந்திகதியன்று சுப்பிறீங்கோட்டிலே திரு.பி.ஸ்ரீஸ்கந்தராஜா, திரு. ஏ. சி. ஏ. அலெஸ் நீதியரசர்கள்முன்பாகச் சத்தியப்பிரமாணம் செய்திருக்கின்றார். அத்தருணம் பெண்மணிகளான அட்வக்கேற்றுகள் உட்பட வழக்கறிஞர்கள்பலரும் சமுகமாயிருந்தனர். சத்தியப்பிரமாணம்செய்தபின் நீதியரசர் திரு. ஸ்ரீஸ்கந்தராஜா அவர்கள் தமிழிலே அவருக்குப் பாராட்டுவழங்கினார்: ஆங்கிலம்நீங்கலாக மற்றொருமொழியில் நீதியரசர்ஒருவர் இவ்விதம் பாராட்டியது இதுவே முதன்முறையாகும்.

## ஆயிரம் புதிய பஸ்கள்

அடுத்த ஓராண்டுகாலத்தில் இலங்கைப போக்குவரத்துச்சபைக்கென்று ஆயிரம் புதியபஸ்கள் இலங்கைவந்து சேரவிருக்கின்றன. கொழும்புத் துறைமுகத்திற்குவரும் கப்பல்கள் ஒவ்வொன்றும் இடவசதியிருந்தால் சராசரி முப்பதுபஸ்கள் வீதம் ஏற்றிவருமென எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்கனவே முன்னூறு இரட்டைத்தட்டு பஸ்கள் லண்டனிலிருந்து கப்பல்மார்க்கமாக வந்துகெண்டிருக்கின்றன. இன்னும் சிறிய வீதிகளில் ஓடக்கூடிய இருநூறு சிறியபஸ்களுக்கும் ஆடர்செய்யப்பட்டிருக்கிறது. இவைகளில் எண்பதுபஸ்கள் இத்தாலியிலிருந்து அடுத்த ஆறுவாரங்களில் வந்துசேருமெனத் தெரியவருகிறது. இவைதவிர எண்ணூறு பெரியபஸ்களும் இறக்குமதி செய்யப்பட விருக்கின்றன.

## தமிழுக்குரிய அந்தஸ்து

தமிழ்மொழிக்குரிய அந்தஸ்தை வழங்கத்தகும் வகையிலே பிரதமர் விரைவில் சட்டவிதிகளை இயற்றிப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க விருக்கிறாரெனச் சுகாதாரமந்திரி சென்றவாரம் மன்னாரிலே தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்புஒன்றில் அறிவித்திருக்கின்றார். அவரைத்தொடர்ந்து மன்னார் எம். பி. திரு. வி. ஏ. அழகக்கோன் அவர்கள் பேசியபோது "தமிழ்ப்பேசும் மக்களின் மொழியுரிமையை அரசாங்கம் சரிவர வழங்குமிடத்துத் தமிழரசுக்கட்சி போராட்டம் நடத்தவேண்டிய அவசியமேயில்லை"யெனக் கூறிநின்றார்.

## விஞ்ஞானக்கலை மாணவர்கள்

சமீபத்திலே கல்விப்பகுதி எடுத்துள்ள கணக்கிலிருந்து விஞ்ஞானக் கல்வியைத் தெரிந்துகொள்ளும் மாணவர்கள்தொகை கணிசமான அளவிலே அதிகரித்திருப்பதாகக் கண்டறியப்பட்டிருக்கிறது. கல்விப் பொதுத்தாரதர சாதாரணவகுப்பிலும், உயர்தர வகுப்பிலும் கற்கும் மாணவர்களில் ஆறிலொரு பங்கினர் அதாவது 51,350 பேர் விஞ்ஞானக்கலைபயிலும் மாணவர்களாம். ஆயினும் இவர்களில் பெரும்பான்மையினர் விஞ்ஞானக்கலை பயில்வதற்குவேண்டிய கல்வித்தரம் குறைந்தவர்களென்பது தெளிவாகியிருக்கிறது.

## சினிமாச் சுவரொட்டிகள்

சினிமாவிளம்பர சுவரொட்டிகளும் இனிமேல் தணிக்கைச்சபையின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்படும் போல் தெரியவருகிறது. ஆபாச சினிமாவிளம்பரச் சுவரொட்டிகளைக் கட்டுப்படுத்துமுகமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. கொழும்புநகரின் பலவிடங்களிலும் ஒட்டப்பட்டுள்ள புதியசிங்கள சினிமாப்படம் ஒன்றுபற்றிய விளம்பர அலங்கோல சுவரொட்டியே இந்தநடவடிக்கைக்குக் காரணமென்று சொல்லப்படுகிறது.


எல்லோரும் விரும்பிச்செல்லும் விருந்தினர் மாளிகை

"பாம் கோட்"

பிரதானவீதி, யாழ்ப்பாணம்.

இங்கே உள்ள வசதிகளிற் சில :

- தாராளமான பெரிய அறைகள்
- மின்விசிறிகள்
- றேடியோ சங்கீத உபகரணங்கள்
- சுகதளபாடங்கள்

அறை ஒவ்வொன்றுடனும்

- ஸ்நான சுத்திகரத் தனிஅமைப்புகள்
- உணவுஅருந்த உல்காசமான திறந்த வெளிஇடம்
- மாடி நந்தவனம்
- பூந்தோட்டமுற்றம்

சிறு பிள்ளைகளுக்கு உகந்த

- விளையாட்டு அறைகள்
- சிறு மிருகசாலை
- மோட்டார்வாகனங்கட்கு 'கறாஜ்'வசதி

உல்லாசப் பிரயாணிகளுக்கு உதவியான

- வழிகாட்டிகள்
- போக்குவரவு வசதிகள்

மேல்நாட்டு, கீழ்நாட்டு முறைகளில் தயாரிக்கப்படும்

- திறமையான உணவு

| | தனிஆள் | இருவர் | |
|---|---|---|---|
| 1-ம் வகுப்பு அறை | 10 ரூபா | 18 ரூபா | நாள் ஒன்றுக்கு |
| 2-ம் வகுப்பு அறை | 7 ரூபா 50 சதம் | 15 ரூபா | |

கிரமமாய் வருபவர்களுக்கும், வர்த்தக பிரயாணிகளுக்கும் விசேஷ சலுகைகள் காட்டப்படும்.

விவாகவரவேற்பு, பிரியாவிடை முதலிய வைபவங்களுக்கு உகந்த இடம் இது.

"பாம் கோட்" மண்டபம், வெளிமுற்றம் கொண்டாட்டங்களுக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

மறவாதீர்கள் :

விடுதி வசதிகளுக்கும், கொண்டாட்டங்களுக்கும் யாழ்ப்பாணத்தில் கீர்த்திவாய்ந்த இடம்

"பாம் கோட்"


இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க, 5-ம் குறுக்குத்தெருவில் வதியும் திரு நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1964-ம் ஆண்டு புரட்டாதிமாதம் 19-ந் திகதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org